**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C 132 of 2018**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : பெரியசாமி** | **Father/Husband's Name: நடராஜன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 22.08.2023**

Accused **Present.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது திண்டுக்கலில் குடியிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிசெய்து வருகிறேன். 24.10.2015 ம் தேதி குதிரையாறு – பழனி செல்லும் TN 57 N 1413 என்ற பதிவெண்ட கொண்ட பேருந்தில் நடத்துனராக பணிபுரிந்து வந்தேன். இப்பேருந்தில் நடந்த விபத்து தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 23.10.2015 ம் தேதி மதியம் 01.00 மணிக்கு சுரேஷ்குமார் என்பவர் பழனியிலிருந்து உடுமலைப்பேட்டைக்கு அவருக்கு சொந்தமான TN 41 AA 3326 என்ற பதிவெண் கொண்ட அப்பாச்சி இருச்சக்கர வாகனத்தில் பழனி – உடுமலை ரோட்டில் காரமடை நீர்மட்டம் முன்பு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்ற போது அவருக்கு எதிரே நான் நடத்துனராக பணிபுரிந்த TN 57 N 1413 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை அதன் ஒட்டுனர் தம்பிராஜ் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இருச்சக்கர வாகனத்தில் மோதி விபத்து

ஏற்படுத்தியதில் சுரேஷ்குமாருக்கு தலை, நெஞ்சு ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார் என்றும், அவரை பழனி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தோம் என்றும், பிறகு அரசு பேருந்தையும், அப்பாச்சி இருச்சக்கர வாகனத்தையும் பழனி நகர் காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரி என்னுடன் பணிபுரியும் நபர் என்ற காரணத்தால் எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.08.30 15:37:45 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி